முருகப்பெருமான் துணை

**மகான் சங்கிலிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.01.2024,** புதன்கிழமை

1. தவதரும ஞான யோகியே
தனிப் பெருங்கருணை வடிவான
அவதாரமே ஆறுமுக ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலைதிங்கள்
குறைவிலா மூவையீர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 17 ம் நாள், 31.01.2024, புதன்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க சங்கிலிச்சித்தர் யானும்
3. யானும் உலகோர் நலம்பெற உரைப்பேன்
உயர்வான ஞானவான்களாகவே
ஞானதேசிகன் நல்வழி காட்டிவர
நானிலத்தில் நம்பிக்கை வைத்து
4. வைத்துமே கலியுகமக்கள் வர
வள்ளல் தன்மை அடைவர்
உத்தமர்களாய் கலியில் சிறந்து
உலகமாற்றம செய்கின்ற ஞானிகளாக
5. ஆகவே அரங்க மகான் ஆசி
அனுகூலம் பெற்றவர்களெல்லாம்
மிகையாக உலகெல்லாம் பெருகி
மேலான ஞானத்தலைமை தனை
6. தன்னையே உருவாக்கி நன்கு
தரணியில் ஞான ஆட்சிதனை
அண்ணல் அரங்கன் நோக்கமாக
அவதாரப் பலனாகப் படைப்பர்
7. படைக்கவே எங்கும் எதிலும்
பண்பானச் சூழல் பெருகி
தடையற ஞானவான்கள் பெருக
தரணியில் பேரற்புதம் நடக்கும்

8. நடக்கவே பிறவித் தொடர்புகொண்ட
நல்மாந்தர்கள் அனைவரும்
தடையின்றி அரங்கன் குடிலில்
தஞ்சம் புகுந்து சரணடைவு காண

9. காணவே சுத்த சைவ நெறியை
காட்டாய வேதமாக ஏற்று
தானாக அவரவர்தானுமே
தக்க சரணாகதி கொண்டு

10. கொண்டுமே உயிர்கொலை நீக்கி
குறிப்பாக தானதரும வழியை
உண்டாக்கி அன்னதான சேவை
உலகமெங்கும் வளர்த்துவர

11. வருகவே தரும ஞான ஆட்சி
வல்லமையான ஞானிகள் தலைமையில்
முருகப்பெருமானும் வெளிப்பட
முழுமையான மாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—